**<u>நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், உடுமலைப்பேட்டை.</u>**

**முன்னிலை : திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் நாள் சனிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், சித்திரை திங்கள் 05 ஆம் நாள்)

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 26/2024</u>**

**CNR No.TNTI17-000560-2024**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், அமராவதி நகர் காவல் நிலையக் குற்ற எண்.341/2020 |
| | //எதிர்// | |
| எதிரி | – | மாரிமுத்து (34/2020),<br>த/பெ. முருகேசன்,<br>1/121, வடக்கு தெரு, கல்லாபுரம்,<br>உடுமலைப்பேட்டை வட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 379 இ.த.ச.வின் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 379 இ.த.ச.வின் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவு 379-ன் கீழ் வனையப்பட்ட குற்றத்திற்கு குறைந்தபட்ச தண்டனையாக அபராதமாக ரூ.7,000/- விதித்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்கண்ட தண்டனை தீர்ப்பானது, குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 248(2)-கீழ் வழங்கப்படுகிறது.<br>மேலும் இவ்வழக்கில் அயிட்டம்-2.TN 41 E 1254 என்ற TVS பைக் ஒன்று கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் P.R.No.143/2023-ல் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அரசுடமையாக்க உத்தரவிடப்படுகிறது. |
| புகார் நாள் | – | 20.06.2020 |
| கைது செய்யப்பட்ட நாள் | – | 20.06.2020 |

| | | |
|---|---|---|
| பிணையில் சென்ற நாள் | – | 20.06.2020 ஆம் தேதியன்று காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| கோப்பு நாள் | – | 01.03.2024 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 29.10.2025 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 02.04.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 18.04.2026 |

இவ்வழக்கானது 01.03.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் இலவச வழக்கறிஞர் திரு.C.சிதம்பரசாமி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்தளிக்கும்,

## தீர்ப்புரை

எதிரி மீது அமராவதி நகர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற எண்.341/2020–ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :

1) கடந்த 20.06.2020 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு அமராவதி நகர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட கல்லாபுரம் கிராமம் அமராவதி ஆற்றில் எதிரி மாரிமுத்து TVS வண்டி எண். TN 41 E 1254 என்ற இருசக்கர வாகனத்தின் மூலம் அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக 2 மணல் முட்டைகளை எடுத்த குற்றத்திற்காக, எதிரி மீது அமராவதி நகர் காவல் ஆய்வாளர் இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவு 379–ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973 பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவு 379–ன் கீழான குற்றத்திற்கான முதல் நோக்கு முகாந்தரம் இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றதால் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் படித்துக்காட்டி விளக்கம் கேட்டபோது இவ்வழக்கின் எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி அல்ல என தெரிவித்தார். மேலும் தன் மீது போடப்பட்ட வழக்கை விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய அரசு தரப்பில் வழிவகை செய்யப்பட்டது.

3) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 03 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு 02 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்</u>:

4) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 ராமகிருஷ்ணன் என்பவர் அமராவதி நகர் காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது கடந்த 20.06.2020 ம் தேதி அ.சா.1 ம், உதவி ஆய்வாளர் சரவணக்குமார் மற்றும் காவலர் 625 சுரேஷ் ஆகியோர் குற்றத்தடுப்பு மற்றும் மணல் திருட்டு தடுக்கும் நடவடிக்கை சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்த போது பூலவாடி புதுநகர், நாவல் ஓடை அமராவதி ஆற்றுப்படுகை ஆகிய பகுதியில் கண்காணித்து கொண்டு போன போது கல்லாபுரம், அமராவதி நகர் பகுதியில் மாலை 15.15 மணிக்கு கண்காணித்த போது ஒரு நபர் தனது டிவிஎஸ் 50 வாகனத்தில் இரண்டு

மணல் மூட்டைகளை கொண்டு வந்தவர் அவர்களை கண்டதும் தப்பித்து ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது மாரிமுத்து த/பெ. முருகேசன் என்பவர் என்றும், கல்லாபுரத்தை சேர்ந்தவர் என்றும், அமராவதி நகர் ஆற்று மணலை திருடிச் செல்வதாக ஒப்புக் கொண்டவரை உதவி ஆய்வாளர் 17.30 மணிக்கு கைது செய்துள்ளார்.

5) பின்னர் 17.45 மணிக்கு மேற்படி எதிரி திருடி வைத்திருந்த 2 மணல் மூட்டைகள் மற்றும் TN 41 E 1254 TVS 50 வாகனத்தையும் கைப்பற்றுதர் மகசர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். அதில் அ.சா.1, காவலர் 625 சுரேஷ் ஆகியோரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துகளுடன் நிலையம் ஆஜராகியுள்ளார். பின்னர் உதவி ஆய்வாளர் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

6) மேலும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.1 உடையது தான் என்று கூறியுள்ளார். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகைப்படத்தில் உள்ள இரு சக்கர வாகனம் மற்றும் மணல் மூட்டைகள் தான் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) அ.சா.2 சரவணக்குமார் என்பவர் அமராவதி நகர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 20.06.2020ம் தேதி அமராவதி நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் குற்றத்தடுப்பு மற்றும் மணல் திருட்டு தடுப்பு நடவடிக்கை சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்த போது நானும் காவலர்கள் ராமகிருஷ்ணன் சுரேஷ் ஆகியோருடன் புறப்பட்டு அமராவதி ஆற்று பகுதிகளின் நாவல் ஓடை, பூளவாடி புதூர் ஆகிய இடங்களில் ரோந்து பணியில் சென்று 17.15 மணிக்கு கல்லாபுரம் ஆற்று பாலம் அருகே கண்காணித்து வந்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த

மாரிமுத்து த/பெ.முருகேசன் என்பவர் ஆற்றில் இருந்து இரண்டு சாக்கு மூட்டைகளில் மணலை திருடி TVS 50 TN 41 E 1254 வாகனத்தில் வைத்து புறப்பட்டுக் கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் அரசு அனுமதி இன்றி அமராவதி ஆற்றில் இருந்து சாக்குப்பைகள் மூலம் ஆற்று மணலை திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்ட வரை 17:30 மணிக்கு கைது செய்து TVS 50 வாகனத்தையும் இரண்டு மணல் மூட்டைகளையும் பொதுஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் உடன் சென்ற காவலர்கள் ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் 17.45 மணிக்கு கைப்பற்றத்தில் மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

8) பின்னர் எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் சத்துக்களையும் 12.15 மணிக்கு நிலையம் ஆஜர்படுத்தி நிலைய குற்ற எண்.341/2020 ச/பி.379 இ.த.ச.–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரியை திரேக பரிசோதனைக்கு பின் பாரா காவல் வசம் ஒப்புவித்து எதிரியை தக்க இரு நபர் ஜாமினில் விடுவித்துள்ளார்.

9) பின்னர் காவலர்கள் ராமகிருஷ்ணன் சுரேஷ் ஆகியவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் கைப்பற்றப்பட்ட மணலை தாசில்தார் அலுவலகத்திற்கு முறைப்படி ஒப்புவித்துள்ளார். பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

10) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் எதிரியிடம் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 313(1) (ஆ)–ன் கீழ் விளக்கி விசாரணை செய்தபோது

எதிரி தனக்கு எதிரான அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்துரைத்துள்ளார். மேலும் தான் நிரபராதி எனவும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனவும், இவ்வழக்கு குறித்து கேட்டறிந்தபோது பொய் வழக்கு என தெரிவித்துள்ளார்.

11) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றுகள் மற்றும் ஆவணச்சான்றுகள் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டுமென்று வாதிட்டார்.

12) எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் இவ்வழக்கில் மணல் மூட்டையின் அளவு பற்றி வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரியானவர் எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**<u>பிரச்சனையும் தீர்வும்</u>**

13) இவழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே இவ்வழக்கின் தீர்வுக்கான பிரச்சனை ஆகும்.

14) இவ்வழக்கில் எதிரியின் அடையாளம் மற்றும் குற்றச் செயல்களைப் பொறுத்து பரிசீலிக்கையில், அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையினைப் பரிசீலிக்கையில் கடந்த 20.06.2020 ஆம் தேதி 17.15 மணியளவில் கல்லாபுரம் ஆற்றுப்பாலம் அருகே உதவி ஆய்வாளர் சரவணக்குமார் என்பவர் காவலர்கள் ராமகிருஷ்ணன் மற்றும் சுரேஷ் ஆகியோர்களுடன் ரோந்து பணியில் இருந்தபோது மாரிமுத்து என்பவர் அமராவதி ஆற்றிலிருந்து 2 சாக்கு

மூட்டைகளில் மணலை திருடி சென்றதாக ஒப்புக் கொண்டதாகவும், அவரை முறைப்படி கைது செய்ததாகவும், எதிரி வைத்திருந்த 2 மணல் மூட்டைகளையும், வாகனத்தையும் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் வந்த காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

15) இந்நிலையில் இதனை பொறுத்து அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.2ன் சாட்சியத்தில் அமராவதி நகர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 20.06.2020ம் தேதி குற்றத்தடுப்பு மற்றும் மணல் திருட்டு தடுப்பு நடவடிக்கை சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்த போது தானும், காவலர்கள் ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோருடன் புறப்பட்டு அமராவதி ஆற்று பகுதிகளின் நாவல் ஓடை, பூளவாடி புதூர் ஆகிய இடங்களில் ரோந்து பணியில் சென்று 17.15 மணிக்கு கல்லாபுரம் ஆற்று பாலம் அருகே கண்காணித்து வந்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மாரிமுத்து த/பெ.முருகேசன் என்பவர் ஆற்றில் இருந்து இரண்டு சாக்கு மூட்டைகளில் மணலை திருடி TVS 50 TN 41 E 1254 வாகனத்தில் வைத்து புறப்பட்டுக் கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் அரசு அனுமதி இன்றி அமராவதி ஆற்றில் இருந்து சாக்குப்பைகள் மூலம் ஆற்று மணலை திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்டவரை 17:30 மணிக்கு கைது செய்ததாகவும் கூறியுள்ளார். அ.சா.1 ஆனவரும் அ.சா.2ன் சாட்சியத்திற்கு ஒத்துப்போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

16) மேலும் அ.சா.2ன் சாட்சியத்தில் எதிரி ஓட்டி வந்த TVS 50 வாகனத்தையும் இரண்டு மணல் மூட்டைகளையும் பொதுஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் உடன் சென்ற காவலர்கள் ராமகிருஷ்ணன், சுரேஷ் ஆகியோர்

முன்னிலையில் 17.45 மணிக்கு கைப்பற்றத்தில் மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறியுள்ளார். மேலும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.1ன் முதன்மை விசாரணையில் 17.45 மணிக்கு மேற்படி எதிரி திருடி வைத்திருந்த 2 மணல் மூட்டைகள் மற்றும் TN 41 E 1254 TVS 50 வாகனத்தையும் கைப்பற்றுதர் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், அதில் தானும், காவலர் 625 சுரேஷ் ஆகியோரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் அ.சா.2 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு ஒத்துப் போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 ஆனவர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு ஒத்துப்போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

17) இதனைப் பொறுத்து அ.சா.ஆ.1 ஆன கைப்பற்றுதல் மகசர் மற்றும் அ.சா.ஆ.4 ஆன படிவம் 91 ஆகிய ஆவணங்களை பரிசீலக்கையில் கடந்த 20.06.2020 ஆம் தேதி 17.45 மணியளவில் கல்லாபுரம ஆற்றுப் பாலம் அருகே என்றும், கைப்பற்றிய சொத்துக்களான 1.இரண்டு மூட்டை மணல், 2.TN 41 E 1254 என்ற TVS 50 Bike என்றும் காட்டப்பட்டுள்ளது. மேலும் அ.சா.ஆ.2 ஆன இருசக்கர வாகனம் மற்றும் மணல் மூட்டைகளின் புகைப்படமானது அ.சா.1 ஆனவர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.ஆ.1 ஆன கைப்பற்றுதல் மகசர், அ.சா.ஆ.2 ஆன வழக்குச் சொத்துக்களின் புகைப்படம் மற்றும் அ.சா.ஆ.4 ஆன படிவம் 91 ஆகிய ஆவணங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு வலுவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

18) மேலும் அ.சா.2ன் குறுக்கு விசாரணையில் மணல் மூட்டையின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் இரு மூட்டைகளின் மதிப்பு ரூ.500/-

என்றும், TVS 50 வானத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் ரூ.1000-1500 என்றும், மணல் மூட்டையின் அளவு 15 கிலோ இருக்கும் என்றும் கூறியுள்ள நிலையில், எதிரி சுமத்தப்பட்ட குற்றத்தினைப் பொய்பிக்கும் வகையில் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணையானது அமையவில்லை.

19) ஆகையினால் மேற்கண்ட விவாதங்களில் இருந்து சாட்சிய சாண்றாவணங்களின் இருந்தும், இவ்வழக்கில் அ.சா.1ன் சாட்சியமும் அ.சா.2 ஆன புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியமும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகும் வகையில் அமைந்துள்ள சூழ்நிலையிலும், இவ்வழக்கில் எதிரி மாரிமுத்து என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இவ்வழக்கின் வழக்குச் சொத்தை சாட்சிகள் ராமகிருஷ்ணன் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்கள் என்பதை மேற்படி அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 ஆன கைப்பற்றுதல் மகசர் மூலமும் தெரியவருகிற நிலையிலும் அதனை மறுக்கும் வகையில் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணை அமையாத நிலையில் மேற்படி வழக்குச் சொத்தை எதிரி திருடியுள்ளார் என்பதை அரசு தரப்பு நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவ்வழக்கில் எதிரி மீது சுமதப்பட்டப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 379-ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20) மேலும் எதிரி இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 379-ன் கீழ் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானித்த நிலையில் எதிரிக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை பற்றி குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டம் 1973, பிரிவு 248(2)-ன் கீழ் வினவியபோது அவர் பின்வருமாறு கூறினார்.

<u>குற்றஞ்சாட்டப்பட்ட எதிரியின் பதில்</u>

"குறைந்தபட்ச தண்டனையாக அபராதம் விதிக்க வேண்டுகிறேன்"

21) இவ்வழக்கில் குற்றத்தின் தன்மை மற்றும் குற்றச் சூழ்நிலையை கருத்திற்கொண்டு எதிரி நன்னடத்தை சட்டத்தின்கீழ் பலன்கள் பெற தகுதியற்றவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

22) மேலும், மேற்கண்ட குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் பதிலை கருத்திற்கொண்டும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் வயது, குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டும் எதிரியின் உடல்நிலையை கருத்திற்கொண்டும் தண்டனையில் பரிசீலிக்கப்படலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

23) முடிவாக எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவு 379-ன் கீழ் வனையப்பட்ட குற்றத்திற்கு குறைந்தபட்ச தண்டனையாக அபராதமாக ரூ.7,000/- விதித்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்கண்ட தண்டனை தீர்ப்பானது, குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 248(2)- கீழ் வழங்கப்படுகிறது.

24) மேலும், இவ்வழக்கில் அயிட்டம்-1.மணல் மூட்டை -2, அயிட்டம்-2.TN 41 E 1254 என்ற TVS பைக் ஒன்று ஆகியவை கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் P.R.No.143/2023 ஆக ஒப்படைக்கப்பட்டுள்ளதில் அயிட்டம்-1 ஆனது ஏற்கனவே வட்டாச்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அரசுடமையாக்கவும் அயிட்டம்-2 ஆனதை அரசுடமையாக்கவும் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கானது மேல் முறையீடு செய்யும்பட்சத்தில் மாண்புமிகு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க செயல்படவும் உத்திரவிடப்படுகிறது.

CC.No.26 of 2024

**Particulars under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| S. No | Description of the accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Cr.No | Name of the Police Station | Name | Father's Name | Occupation | Residency | Age |
| 1. | 341/2020 | Amaravathi | Marimuthu | Murugeshan | - | 1/121, North Street, Kallapuram, Udumalpet. | 34/2020 |

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension | Release on Bail | Commitment | Commencement of Trial | Close of Trial | Sentence or Order | Service of copy of Judgment on accused | Explanation of Delay |
| 20.06.2020 | 20.06.2020 | 20.06.2020 | Bailed by Police on 20.06.2020 | Not applicable | 29.10.2025 | 02.04.2026 | 18.04.2026 | Nil | No Delay |

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் நாளாகிய இன்று இவ்வவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T
Digitally signed by NITHYAKALA T
Date: 2026.04.18 21:59:04 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

**இணைப்பு :–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

அ.சா.1 29.10.2025 முருகவேல் (கைப்பற்றுதல் மகசர் சாட்சி)

அ.சா.2 02.03.2026 சரவணகுமார் (புலன் விசாரணை அதிகாரி)

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

அ.சா.ஆ.1. அ.சா.1 கைப்பற்றுதல் மகசர்

அ.சா.ஆ.2. அ.சா.1 இருசக்கர வாகனம் மற்றும் மணல் மூட்டைகளின் புகைப்படம்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | அ.சா.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | அ.சா.2 | படிவம் 91 |

**எதிரி தரப்பு சாட்சிகள் :– இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணம் :– இல்லை**

**அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை**

**குறிப்பு :–**

1. எதிரி கு.வி.மு.ச பிரிவு 248(2)ன் கீழ் தண்டிக்கப்படுகிறார்.
2. தீர்ப்பின் நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.
3. வழக்கு விசாரணைக்காலத்தில் பிணையிலிருந்துள்ளார்.
4. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
5. தீர்ப்பு குறித்து காவல்துறையினர் மற்றும் சிறைச்சாலைக்கு தெரிவிக்கப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.04.18 21:57:12 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பூர்

அவர்களுக்கு